## மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்

O.S. No. 46 of 2021 C/w. O.S.No. 65/2021

பெயர் : ஜெகதீஷ்

24.03.2026

**பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் :**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் O.S.65/2021 வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்தானது குன்னூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள O.S.199/1999 வழக்கிலும் சம்பந்தப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். O.S.199/1999 வழக்கின் பிராது நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை இல்லை, இனி தாக்கல் செய்ய உள்ளேன். உண்மையில் தாவா சொத்து மேற்படி O.S.199/1999 வழக்கில் சம்பந்தப்பட்டது அல்ல என்றால் தவறு. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–8ல் ரூபாய் 20,05,000/– தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றால் தவறு. அந்த தொகை வெவ்வேறு தேதிகளில் கொடுக்கப்பட்டதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பாக எந்தெந்த தேதிகளில் அது கொடுக்கப்பட்டது என்ற விவரம் அதில் இல்லை என்பதும் சரி. உண்மையில் அவ்வாறு தொகை எதுவும் கொடுக்கப்படாததால்தான் அந்த தேதி விவரங்கள் அதில் கூறப்படவில்லை என்றால் தவறு. வாதிகளின் சொத்துக்களை அபகரிப்பதற்காகவே நானும் என் தந்தையும் மேற்படி ஆவணத்தை பொய்யாக உருவாக்கியுள்ளோம் என்றால் தவறு. நீதிமன்ற உத்தரவின்படி மேற்படி தொகை ரூபாய் 20,05,000/–ஐ வங்கி கடனுக்காகவும் டீ புரோக்கர்களுக்கு வாதி அவருடைய பங்கிற்குசெலுத்த வேண்டியிருந்த தொகைகளுக்காகவும் செலுத்தப்பட்டதாக

சாட்சி விளக்கம் அளிக்கிறார். வா.சா.ஆ–8ல் இந்த விளக்கம் இல்லை என்றால் தவறு. வா.சா.ஆ–8ல் பக்கம் 4ல் இந்த விளக்கம் கண்டுள்ளது. நான் கூறுவது தவறு என்றும் நீதிமன்ற உத்தரவுப்படி அவ்வாறு வங்கி கடனுக்காகவும், டீ புரோக்கர்களுக்கு வாதி செலுத்தவேண்டியிருந்த அவருடைய விகிதாச்சார தொகைக்காவும் செலுத்தப்பட்டதாக விவரங்கள் இல்லை என்றால் தவறு. கோயமுத்தூர் கடன் வசூல் தீர்ப்பாய உத்தரவின் அடிப்படையில் அந்த தொகை வங்கிக்கு செலுத்தப்பட்டது. வங்கி கடன் வசூல் தீர்ப்பாயத்தின் உத்தரவு நகல் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வங்கி இது சம்பந்தமாக நிலுவை கடன் தொகை எதுவும் இல்லை என்று வழங்கிய ரசீதையும், தொகை செலுத்தப்பட்டதற்கான ரசீதையும் நான் தாக்கல் செய்துள்ளேன். வாதி எனக்கு அவ்வாறு வங்கிக்கு கடன் வசூல் தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி செலுத்த வேண்டிய கடனில் தன் பங்கு தொகைக்காவும், டீ புரோக்கர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையில் தன் பங்கு தொகைக்காவும் தொகை செலுத்தும்படி கடிதம் எதுவும் கொடுத்திருந்தாரா என்றால் 20.10.2009 குடும்ப ஏற்பாட்டு ஆவணத்திலும், அதன்படி பின்னிட்டு வாதி எனக்கு 23.10.2009 தேதியிட்டு கொடுத்த அதிகார பத்திரத்திலும் அந்த விவரங்கள் உள்ளது. வா.சா.ஆ–8 விடுதலை பத்திரத்தில் 20.10.2009 குடும்ப ஏற்பாட்டு ஆவணத்திலும், அதன்படி பின்னிட்டு வாதி எனக்கு 23.10.2009 தேதியிட்டு கொடுத்த அதிகார பத்திரத்திலும் அந்த தொகை கொடுக்கப்பட்ட விவரங்கள் கூறப்பட்டுள்ளதா என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. டீ புரோக்கர்களுக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரங்களை தெரிவிக்கும் ரசீதுகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–8ன் படி உண்மையில் எந்த ஒரு தொகையும் வாதிக்கு செலுத்தப்படவில்லை என்றால் தவறு. வாதி சார்பாக எனக்கும், என் அப்பாவிற்கும், என் சகோதரிக்கும் வா.சா.ஆ–5

நோட்டிஸ் அனுப்பப்பட்டது என்பது சரி. அந்த அறிவிப்பில் அதற்கு முன்பு வாதி ஏற்படுத்தியுள்ள அனைத்து அதிகார பத்திரங்களையும் அதன்மூலம் ரத்து செய்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார், ஆனால் எந்தெந்த தேதிகளில் அவர் எதற்காக ஏற்படுத்திய அதிகார பத்திரங்களை ரத்து செய்வதாக குறிப்பாக அதில் தெரிவிக்கவில்லை. O.S. 46/2021 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மேற்படி அறிவிப்பை பற்றி குறிப்பிடுகையில் நான் வாதி குறிப்பாக எந்தெந்த தேதிகளில் அவர் ஏற்படுத்திய அதிகார பத்திரங்களை ரத்து செய்வதாக குறிப்பிடவில்லை என்ற ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்றால் சரி. வாதி மேற்படி அறிவிப்பு அனுப்பிய 25.11.2020 தேதியில் அவர் இந்தியாவில் இல்லை என்பதால் அந்த அறிவிப்பை அவர் அனுப்பியிருக்க முடியாது என்றும் சட்ட விரோதமாக துர்லாபம் அடைய விரும்பும் யாரோ ஒருவர்தான் அதை அனுப்பியிருக்க வேண்டும் என்னுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்பது சரி. வாதி ஒருக்கால் அந்த அறிவிப்பை அனுப்பியதாக நிருபிக்கப்பட்டால் அதில் உள்ள சங்கதிகளை உண்மை என்று ஏற்றுக்கொள்கிறேனா என்றால் இல்லை. அந்த அறிவிப்பு உண்மையில் வாதி அனுப்பியதுதான் என்றும், நான் துர்லாபம் அடைய வேண்டி அதை வாதி அனுப்பவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் தவறு.

வா.சா.ஆ–8 விடுதலை பத்திரம் ஏற்படுத்தியபோது வாதியின் Life certificate தாக்கல் செய்யப்பட்டது என்பது சரி. அந்த Life certificate தயார் செய்யப்பட்ட 31.05.2021 தேதியில் வாதி இந்தியாவில் இல்லை என்றால் அந்த தேதியில் அவர் இந்தியாவில் இல்லை என்பது சரி. அந்த தேதியில் அவர் USAவில் இருந்தார். Life certificate என்பது ஒரு மாத காலத்திற்கு மட்டுமே Valid என்பதால் நாங்கள் வங்கி கடன்களை தீர்க்க நாங்கள் சொத்துக்களை விற்க வேண்டியிருந்ததால் அந்த சமயத்தில் சொத்துக்களை

கிரையம் பெற ஒருவர் முன் வந்ததால் அந்த Life certificate வழங்கிய மருத்துவர் தெரிந்தவர் என்பதால் அவர் வீடியோ கான்பரன்ஸ் மூலம் வாதியை தொடர்பு கொண்டு உறுதி செய்தபிறகு அந்த Life certificate கொடுத்தார். வீடியோ கான்பரன்ஸ் மூலம் கையொப்பம் இட முடியாது என்பது சரி. வாதி இந்தியாவிற்கு வந்திருந்தபோது அந்த Life certificate ல் தேதி குறிப்பிடாமல் மருத்துவர் முன்பு கையொப்பம் போட்டு கொடுத்திருந்தார். உண்மையில் அந்த Life certificate ல் உள்ள கையொப்பம் வாதியுடையது அல்ல என்றும் அதை நானும் என் அப்பாவும் அந்த மருத்துவரும் சேர்ந்து அதை உருவாக்கியுள்ளோம் என்றும் சொன்னால் தவறு. எனவே அந்த Life certificate அடிப்படையில் உருவாக்கிய வா.சா.ஆ–8 விடுதலை பத்திரம் செல்லாது என்றால் தவறு.

அந்த வா.சா.ஆ–8ல் பொது அதிகார பத்திரம் தேதி 17.03.2011, ஆவண எண்.22/2011 மாவட்ட பதிவாளர் அலுவலகம், ஊட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் அவ்வாறு ஒரு ஆவணமே இல்லை என்றும் அதை பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் தவறு. அந்த பொது அதிகார பத்திரம் என் அப்பாவிடம் உள்ளது. அதை இதுவரை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பது சரி. வாதி தானும், நானும் என் அப்பாவும் சேர்ந்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் தனக்கு பாத்தியப்பட்ட பங்கை பிரித்து கொடுக்கவேண்டும் என்று வா.சா.ஆ–10 அறிவிப்பு எங்களுக்கு அனுப்பியிருந்தார் என்றால் சரி. அதன் பிறகும் நாங்கள் பாகத்தை பிரித்து கொடுக்க முன் வராததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய நேரிட்டது என்றால் அவருக்கு உரிமையில்லை என்பதால் பங்கு எதுவும் பிரித்து கொடுக்க தேவையில்லை. வா.சா.ஆ–8 விடுதலை பத்திரமும் வாதி கோரியுள்ள காரணங்களுக்காக ரத்து செய்ய உத்தரவாக வேண்டியுள்ளது என்றால் தவறு.

**<u>மறு விசாரணை</u>**: இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.03.24 17:25:04 +0530